1982 செப்டம்பர் 10] [டாக்டர். இரா. நெடுஞ்செழியன்]

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது

5. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஊ) கேளிக்கை வரி (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு, 1982.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு: தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு கேளிக்கை வரி (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவை அறிமுகம் செய்ய ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை)

6. அரசினர் சட்ட முன்வடிவுகள்— தொடர்ச்சி

(ஈ) கேளிக்கை வரி (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு 1982.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழி கிறேன்: ''தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு கேளிக்கை வரி (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்து, மேற்படி சட்டமுன்வடிவு @ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்.''

திரு. அ ரகுமான்கான்: ஒரு ஒழுங்கு பிரச்னை கிளப்ப விரும்பு கிறேன். அண்ணாமலைப் பல்கலைக் கழக (திருத்த) சட்டமுன் வடிவை நேற்றே, அமைச்சர் வரவில்லையென்று விட்டு விட்டார்கள், அஜெண்டாபடி கேளிக்கை வரிச் சட்டம், அதற்குப் பிறகுதான் வரவேண்டும். ஆனால் உங்களுடைய சௌகரியத் திற்காக நாங்கள் தயாராக இல்லாத நிலையில்....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கேளிக்கை வரிச் சட்ட முன்வடிவை முதலில் எடுத்துக் கொள்வதற்காகத்தான் தீர்மானம் மொழியப்பெற்று அது நிறைவேறிவிட்டது. ஆகவே, அந்தப் பிரச்னை அதோடு முடிந்துவிட்டது. அத்தீர்மானத்தை அவையும் ஏற்றுக்கொண்டுவிட்டது.

திரு. அ. ரகுமான்கான்: நான் ஒரு டிஸ் ஆர்டரைத் தங்க ளுடைய கவனததிற்குக் கொண்டு வருகிறேன். நான் சொல்வது தவறாக இருந்தால் உட்கார்ந்து விடுகிறேன். எனக்கு ஒரே ஒரு நிமிடம் அனுமதி கொடுங்கள்.

@ 1982 செப்டம்பர் 4 ஆம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.